செய்தி வெளியீடு எண்: 679 நாள்: 19.09.2018

# செய்தி வெளியீடு

## கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரிடம் அளிக்கப்படும் மனுக்களை இணையதளம் மூலம் கண்காணிப்பதற்கான பயன்பாடு

## (Web Application – Petition Processing Portal)

**மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு ஆர்.பி. உதயக்குமார் தொடங்கி வைத்தார்.**

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் சுமார் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அப்பணியாளர்கள் தங்களின் பல்வேறு வகையான கோரிக்கைகளுக்காக அவ்வப்போது வருவாய்த் துறையின் தலைவர் என்ற முறையில் கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரிடம் விண்ணப்பங்களை அளித்து தீர்வு கண்டு வருகின்றனர். மேலும், பொதுமக்களும் வருவாய் நிருவாகத் துறை தொடர்பான தங்களின் கோரிக்கை மனுக்களை அளித்து வருகின்றனர். இவ்வாறு பெறப்படும் மனுக்களின் நிலையை கண்காணிப்பதற்கும் அவற்றின் மீது நடவடிக்கைகளை துரிதப்படுத்தவும் இதுவரை தனிப்பட்ட மின்னணு மூலமான கண்காணிப்பு இல்லாமல் இருந்து வந்தது. தற்போது மின்னணு தொழில்நுட்பத்தை மேலும் பயன்படுத்தும் வகையில் கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரால் பெறப்படும் மனுக்களின் மீது நடவடிக்கைகளை கண்காணிக்கவும்/துரிதப்படுத்தவும் தேசிய தகவலியல் மையம் (NIC – Tamilnadu State Centre) உதவியுடன் ஒரு வலைதள பயன்பாடு (Web Application - http://gdp.tn.gov.in ) உருவாக்கப்பட்டுள்ளது.

இவ்வலுவலகத்தில் பெறப்படும் கோரிக்கை மனுக்களை இந்த வலைதள பயன்பாட்டின்மூலம் தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் இதர அலுவலர்களுக்கு உரிய நடவடிக்கைகாக அனுப்பப்படும். இம்முறையில் பெறப்படும் மனுக்களுக்கு குறுஞ்செய்தி (SMS) மூலம் உடனடியாக ஒப்புகை வழங்கப்படும். மேலும் விண்ணப்பதாரர்கள் தங்களின் மனுக்களின் நிலைமையை இந்த இணையதளத்தில் தெரிந்துகொள்ள வசதியும் செய்யப்பட்டுள்ளது. சமர்ப்பிக்கப்பட்ட மனுக்களின் தீர்வினை மனுதாரருக்கு குறுஞ்செய்தி

(SMS) மூலம் தெரிவிக்கப்படும். இப்புதிய இணையதளத்தின் மூலம் பெறப்படும் மனுக்கள் விரைவாகவும் உரிய முறையிலும் தீர்வு செய்யப்படுவதை உறுதி செய்யப்படும்.

இன்று 19.09.2018 சென்னை எழிலகத்தில் இந்த இணையதள பயன்பாட்டை மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு ஆர்.பி. உதயக்குமார் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிர்வாக ஆணையர், முனைவர் கொ. சத்தியகோபால் இ.ஆ.ப., வருவாய்த் துறை முதன்மை செயலர், முனைவர் அதுல்யா மிஸ்ரா, இ.ஆ.ப., பேரிடர் மேலாண்மை, ஆணையர், திரு இராஜேந்திர ரத்னூ, இ.ஆ.ப., வருவாய் நிர்வாக, இணை ஆணையர் திருமதி எம். லட்சுமி, இ.ஆ.ப., தேசிய தகவலியல் மைய முதுநிலை தொழில் நுட்ப இயக்குநர்கள் முனைவர் அ. மோகன், வே. ப. கண்ணன், மூத்த கணினி ஆய்வாளர் திரு ச. சத்தியமூர்த்தி ஆகியோர் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**